# ALAGAPPA UNIVERSITY

(A State University Established in 1985)

KARAIKUDI - 630 003, Tamil Nadu, India

www.alagappauniversity.ac.in

| 2017 | 2018 | 2018 | 2019 | 2019 |
|---|---|---|---|---|
| Accredited with A+ Grade by NAAC (CGPA : 3.64) | MHRD Govt. of India, UGC University Grants Commission — Graded as Category-1, Granted Autonomy | MHRD — Swachh Campus Rank : 4 | NIRF National Institutional Ranking Framework — Rank : 28 | QS World University Rankings — India Rank : 20, BRICS Rank: 104, Asia Rank : 216 |


The Special Supplementary Examinations (for all programmes in UG/PG/M.Phil.) for the outgoing students of University Departments and Affiliated Colleges of Alagappa University, who have failed in only two papers will be held on Sunday, the **04th August 2019** at Dr. Umayal Ramanathan College for Women, Karaikudi.

The application form can be downloaded from the University website **www.alagappauniversity.ac.in.**

The eligible outgoing students of University Departments and Affiliated Colleges under regular stream of valuation may submit their filled-in application for Special Supplementary Examinations to the office of the Controller of Examinations along with a demand draft for **Rs.1,000/-** per paper (favouring the Registrar, Alagappa University payable at Karaikudi) on or before **22.07.2019.**

The revaluation results of all programmes (UG/PG/M.Phil.) of Affiliated Colleges will be published & hosted in the University website on **22.07.2019**. Based on the revaluation results, the candidates who are eligible for Special Supplementary Examinations may submit the duly filled-in applications directly at the Examination Section (Affiliated Colleges wing) of Alagappa University, Karaikudi on **23.07.2019** and **24.07.2019**.

Students applied for Special Supplementary Examinations can collect their Hall Tickets at the respective Departments/Colleges on **01.08.2019** and **02.08.2019**, said Dr. K. Uthayasuriyan, Controller of Examinations i/c, Alagappa University.

**REGISTRAR**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

**<u>காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் இணைப்புக் கல்லூரி மாணவர்களுக்கு சிறப்பு துணைத்தேர்வு</u>**

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் கடந்த ஏப்ரல் 2019-ல் நடைபெற்ற இறுதி பருவமுறை தேர்வுகளில் (UG/PG/ M.Phil Programmes) இரண்டு பாடங்களில் மட்டும் தேர்ச்சி பெறாத மாணவர்கள் உடனடியாக பட்டம் பெறவும், உயர்கல்வி தொடரவும் வாய்ப்பளிக்கும் நோக்கத்தில் சிறப்பு துணைத்தேர்வு 04-08-2019 ஆம் தேதி (ஞாயிறு) முனைவர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி, காரைக்குடியில் நடைபெறவுள்ளது.

இத்தேர்விற்கான விண்ணப்பத்தினை பல்கலைக்கழகத்தின் இணையதளமான **<u>www. alagappauniversity.ac.in</u>** லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

அழகப்பா பல்கலைக்கழகத் துறைகள் மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் கடந்த ஏப்ரல் 2019-ல் நடைபெற்ற இறுதி பருவமுறை தேர்வு எழுதியவர்களில் இரண்டு பாடங்களில் மட்டும் தேர்ச்சி பெறாத மாணவர்கள் இச்சிறப்புத் துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் தாள் ஒன்றுக்கு ரூ.1000/- க்கான வங்கி வரைவோலை (பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி என்ற பெயரில்) இணைத்து 22-07-2019 ஆம் தேதிக்குள், அழகப்பா பல்கலைக்கழக தேர்வுப்பிரிவிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அழகப்பா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளுக்கான ஏப்ரல் 2019-ல் நடைபெற்ற தேர்வுகளுக்கான மறுமதிப்பீட்டு முடிவுகள், செய்தித்தாள்கள் வாயிலாகவும், பல்கலைக்கழக இணையதளத்திலும் 22.07.2019 அன்று வெளியிடப்படவுள்ளது.

அழகப்பா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகளுக்கான ஏப்ரல் 2019-ல் நடைபெற்ற தேர்வுகளுக்கான மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்து, இம்மறுமதிப்பீட்டின் அடிப்படையில் சிறப்பு துணைத் தேர்வுக்கு தகுதி பெறும் மாணவர்கள் இச்சிறப்புத் துணைத்தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பினால், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 23.07.2019 மற்றும் 24.07.2019 ஆகிய தேதிகளில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தேர்வுப்பிரிவில் நேரடியாக சமா்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

இச்சிறப்பு துணைத்தேர்வுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தங்களுக்குரிய நுழைவுச்சீட்டினை அந்தந்த துறைகளில்/கல்லூரிகளில் 01.08.2019 மற்றும் 02.08.2019 தேதிகளில் பெற்றுக் கொள்ளலாம் என தேர்வாணையர்(பொ) முனைவர் கா. உதயசூரியன் தெரிவித்துள்ளார்.

**பதிவாளர்**